DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | **முத்துமுனியாண்டி** (P.w.1) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 3rd day of December 2025

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :-**

நான் தற்போது அருப்புக்கோட்டை, ஆத்திபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் அருப்புக்கோட்டை அரசு பணிமனையில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2013ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் அருப்புக்கோட்டையில் இருந்து நத்தகுளம் வழி தடத்தில் அரசு பேருந்தில் நான் ஓட்டுநராகவும் நடத்துனராக திருக்கண்ணன் என்பவரும் அருப்புக்கோட்டையில் 02.55 மணிக்கு பேருந்தை எடுத்து சாமிநத்தம் பாதைக்கும் பனையூருக்கும் இடையே உள்ள பாலம் அருகே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கமுதி – திருச்சுழி நெடுஞ்சாலையில் 3.45மணியளவில் சென்றபோது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த மணல் லாரி நான் ஓட்டிச் சென்ற பேருந்தின் முன்பக்க வலதுபுறத்தில் மோதிவிட்டது. இதனால் பேருந்திற்கு சேதம் ஏற்பட்டுவிட்டது. எனக்கு வலது காலில் எலும்பு

முறிவு ஏற்பட்டுவிட்டது. பேருந்தில் இருந்தவர்களுக்கும் சிராய்ப்பு காயம் மற்றும் சிறு சிறு காயம் ஏற்பட்டது. நடந்துநர் லாரி மோதியதால் முன் பக்க கண்ணாடி உடைந்து பேருந்தின் முன்புறம் சாலையில் கீழே விழுந்துவிட்டார். அவருக்கு கழுத்து நரம்பில் அடிபட்டிருந்தது. அவர் பேசவில்லை. நான் மற்றும் என்னுடன் காயம் பட்ட நபர்களை திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு தீயணைப்பு வாகனத்தில் அழைத்து சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது திருச்சுழி போலிசார் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கிச் சென்றார்கள். பின்பு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அதன்பிறகு நடத்துநரை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பிறகு அவர் இறந்துவிட்டதாக நான் கேள்விபட்டேன். நான் ஓட்டிச் சென்ற அரசு பேருந்தின் மீது லாரியை ஓட்டி வந்த நபரின் பெயர் முதல் தகவல் அறிக்கை பார்த்து பாலமுருகன் என்று தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**எ.த.கு.வி –**

1. நான் 16 வருடமாக பணியில் இருந்து வருகிறேன். 2013ம் வருடம் திருச்சுழி – கமுதி ரோடானது ஒரு வழிச்சாலை என்றால் சரிதான். மற்றொரு வாகனம் கடந்து செல்லவேண்டும் என்றால் ரோட்டில் இருந்து கீழே இறங்கிதான் செல்லமுடியும் என்றால் சரிதான். ரோட்டின் ஓரத்தில் குண்டும் குழியுமாக இருக்கும் என்றால் விபத்த நடந்த இடத்தில் குண்டும் குழியுமாகதான் இருந்தது. நான் பேருந்தை ஓட்டிச் சென்றபோது நானும் நடத்துநரும் பேசிக் கொண்டே சென்றோம் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டபோது எதிரில் 3 லாரிக்கு பின்னால்தான் விபத்து ஏற்படுத்திய லாரி வந்தது என்றால் சரிதான். அந்த 3 லாரிகளும், விபத்தை ஏற்படுத்திய லாரியும் ரோட்டின் இடதுபுறமாக இறங்கி சென்றார்கள் என்றால் சரிதான். மேற்படி 3 லாரிகள் மற்றும் விபத்தை

ஏற்படுத்திய லாரிகள் 100 மீ தொலைவில் வரும்போதே இடதுபுறமாகதான் வந்தார்களா என்றால் ஆமாம், நான் பார்த்துவிட்டு மெதுவாக சென்றேன். அந்த லாரியானது விபத்தின்போது அரசால் அனுமதிக்கப்பட்ட அனுமதி சீட்டோடுதான் ஓடிக் கொண்டிருந்தது என்றால் சரிதான். நான்கு லாரிகளும் இடது புறமாக வருவதால் அந்த இடைவெளியில் சென்றுவிடலாம் என்று நான் பேருந்தை இயக்கினேன் என்றால் சரிதான். பேருந்தில் 40, 50 நபர்கள் இருப்பதால் ரோட்டின் மேல்தான் சென்றேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய லாரியின் வலது புற சக்கர லிண்ட் அறுந்து வலதுபுறமாக இழுத்துச் சென்று பேருந்தின் மீது மோதியதாக தெரிந்து கொண்டேனா என்றால் இதுவரை தெரியாது, தற்போது சொல்லும்போதுதான் தெரியும். ஒரு வழிச்சாலை என்பதால் எந்த வாகனங்களும் விபத்து நடந்த இடத்தில் 30, 40 கிமீ வேகத்திற்கு மேல் செல்லமுடியாது என்றால் சரிதான்.

2. எனது 15 வருட பணியில் இதுவரை எத்தனை விபத்து நடந்திருக்கும் என்றால் நான்கு முறை நடந்திருக்கும். அந்த நான்கு வழக்குகளிலும் என் மீதுதான் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான். பேருந்தில் எத்தனை நபர்களுக்கு காயம் என்று எனக்கு தெரியாது என்றால் சில நபர்களுக்கு ஏற்பட்டது. வழக்கு பற்றிய முழுவிபரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கு விபத்தின் போது இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்ட விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. அசா1 புகார் வாக்குமூலத்தில் என்னஎழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தேதி, நேரம், பெயர் ஆகிய விபரங்கள் தற்போது போலிசார் சொல்லி தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தன்று எதிரி ரோட்டின் இடது ஓரமாக சென்றார் என்றாலும் நான் பேருந்தை ரோட்டிற்கு இடதுபுறமாக இறக்கி செல்லாமல் போகும்போது எதிரி ஓட்டிய லாரியின் வலது புற சக்கரத்தின் எண்ட் துண்டிக்கப்பட்டு அதனால் நான் பேருந்தை லாரி மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்தானது எதிரி கவனக்குறைவு காரணம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் மனு

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.